**செய்தி வெளியீடு எண்.153** **நாள் 19.11.2019**

**பத்திரிக்கைச் செய்தி**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 18.07.2019 அன்று சட்ட மன்ற பேரவையின் சட்டசபை விதிகள் எண்.110-ன் கீழ் மக்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு, அரசு எடுத்து வரும் முயற்சிகளுக்கு வலுசேர்க்கும் வகையில் முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்வு திட்ட முகாம் தமிழகம் முழுவதும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டதற்கிணங்க, சென்னை மாவட்டத்தில் 22.08.2019 முதல் 30.08.2019 வரையில் வட்ட அளவில் வார்டுவாரியாக முதலமைச்சரின் சிறப்பு குறைதீர்க்கும் நாள் முகாம்கள் நடைபெற்றது. இரண்டாம் கட்டமாக இன்று சென்னை - 17, தியாகராயர் நகர், சர்.பிட்டி தியாகராயர் கலையரங்கத்தில் மத்திய வருவாய் கோட்ட எல்லைக்கு உட்பட்ட அம்பத்தூர், அயனாவரம், அமைந்தகரை, மாம்பலம், எழும்பூர் ஆகிய வருவாய் வட்டங்களில் பெறப்பட்ட மனுக்களுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு பொது மக்களுக்கு பட்டா, சாதி சான்று, சமூக பாதுகாப்பு திட்டத்தின் மூலம் உதவித்தொகை, குடும்ப அட்டை அளித்தல் போன்ற பல கோரிக்கைகள் தொடர்பான ஆணைகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் சிறப்பு குறைதீர்வு திட்டத்தின் மூலம் பொது மக்களுக்கு இன்று 19.11.2019 வழங்கப்பட்டது. இதன் மூலம் 834 பொது மக்கள் பயன் அடைந்துள்ளனர். இவ்விழாவில் மாண்புமிகு மீன்வளம்/பணியாளர் நிருவாக சீர்த்திருத்த துறை அமைச்சர் திரு.D.ஜெயக்குமார், தி.நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.சத்யநாராயணன் விருகம்பாக்கம் சட்ட மன்ற உறுப்பினர் திரு.ரவி மற்றும் ஆகியோர் கலந்து கொண்டு 78,24,000/- மதிப்புள்ள நலத்திட்டங்களை வழங்கினார் உடன் சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி.ஆர்.சீத்தாலட்சுமி இ.ஆ.ப., மற்றும் உயர் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை - 01.